செய்தி வெளியீடு எண்.491 நாள்.28.6.2008

செய்தி வெளியீடு

# இந்த ஆண்டில் 27 தமிழறிஞர்களின் நூல்கள் அரசுடைமை!

# இதுவரை சான்றாவணங்கள் அளித்துள்ள 21 தமிழறிஞர்களின் மரபுரிமையர்க்கு ஒரு கோடியே 15 இலட்ச ரூபாய் பரிவுத் தொகை!

## முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்

சிறந்த தமிழ்ச் சான்றோர்களின் கருத்துகளும், சிந்தனைகளும் வளரும் தலைமுறைக்கு மட்டுமன்றி இனிவரும் தலைமுறைகளுக்கும் பயனளிக்கத்தக்க வகையில், அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கும் திட்டம் தமிழக அரசின் சார்பில் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 2006இல் பரிதிமாற்கலைஞர், புலவர் குழந்தை, சிலம்புச்செல்வர் ம.பொ.சி முதலான 16 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவர்களின் மரபுரிமையர்க்கு ஒரு கோடியே 23 இலட்ச ரூபாயும், 2007இல் ம. சிங்காரவேலர், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், அ.ச. ஞானசம்பந்தனார், குன்றக்குடி அடிகளார் முதலான 19 தமிழறிஞர்களின் நூல்கள் அரசுடைமையாக்கப்பட்டு அவர்களின் மரபுரிமையர்க்கு ஒரு கோடியே 75 இலட்சம் ரூபாயும் பரிவுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில், கவிஞர் பெரியசாமித் தூரன், பேராசிரியர் க.வெள்ளைவாரணனார் உள்ளிட்ட 27 தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமை ஆக்கி, அவர்தம் மரபுரிமையர்களுக்கு மொத்தம் 1 கோடியே 65 இலட்ச ரூபாய் பரிவுத் தொகை வழங்கிட முதலமைச்சர் கலைஞர் 21.5.2008 அன்று ஆணையிட்டார்.

அந்த ஆணையின்படி, நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்களைப் படைத்துள்ள 27 தமிழ் அறிஞர்களில், மரபுரிமையர் என்பதற்குரிய சான்றாவணங்களை இதுவரை அரசுக்கு வழங்கியுள்ள கவிஞர் பெரியசாமித் தூரன், பேராசிரியர் க.வெள்ளைவாரணனார் ஆகிய இருவருடைய

**படைப்புகளுக்காக, அவர்களின் மரபுரிமையருக்குத் தலா பத்து இலட்சம் ரூபாய் வீதம் 20 இலட்சம் ரூபாய்;**

**மகாவித்வான் ரா.ராகவையங்கார், திரு. உடுமலை நாராயண கவி, திரு.கு.மு.அண்ணல் தங்கோ, திரு. அவ்வை தி.க. சண்முகம், திரு. லா.ச. ராமாமிர்தம், திரு. வல்லிக்கண்ணன், திரு.நா.வானமாமலை, கவிஞர் புதுவைச் சிவம், திரு.அ.இராகவன், திரு.தொ.மு.சி.ரகுநாதன், திரு.சக்திதாசன் சுப்பிரமணியன், டாக்டர் ந.சஞ்சீவி, திரு.முல்லை முத்தையா, கவிஞர் எஸ்.டி.சுந்தரம், கவிஞர் மீரா, புலவர் முகமது நயினார் மரைக்காயர், திரு.சு.சமுத்திரம், திரு.கோவை இளஞ்சேரன், பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் ஆகிய 19 தமிழறிஞர்களின் படைப்புகளுக்காக, அச்சான்றோர்களின் மரபுரிமையர்களுக்குத் தலா ஐந்து இலட்சம் ரூபாய் வீதம் 95 இலட்சம் ரூபாய்; ஆக மொத்தம் 21 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு முதலமைச்சர் கலைஞர் இன்று (28.6.2008) 1 கோடியே 15 இலட்ச ரூபாய் பரிவுத் தொகை வழங்கி மகிழ்ந்தார்.**

**அரசுடைமையாக்கப்பட்டுள்ள மற்ற 6 தமிழ் அறிஞர்களான பண்டிதர் க.அயோத்திதாசர், திரு.ஆபிரகாம் பண்டிதர், திரு.சதாவதானி செய்குத்தம்பி பாவலர், டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை, திரு. விந்தன், பேராசிரியர் ஆ.கார்மேகக் கோனார் ஆகிய 6 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு, அவர்கள் உரிய சான்றாவணங்களை வழங்கியபின் ஏற்கனவே அரசு அறிவித்துள்ளபடி பரிவுத்தொகை வழங்கப்படும்.**

**முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் பரிவுத் தொகையைப் பெற்றுக் கொண்ட தமிழ் அறிஞர்களின் மரபுரிமையர்கள் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியோடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிவரும் மகத்தான தமிழ்த் தொண்டுகளில் அறிஞர்களின் நூல்களை அரசுடைமையாக்கும் இந்தத் திட்டம் தமிழ் அறிஞர்களின் குடும்பங்களைப் போற்றிப் பாதுகாக்கும் மிகச் சிறந்த திட்டம் என்று கூறி முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்குத் தங்களுடைய நன்றியையும், பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்தனர்.**

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9